**வருகின்ற 2020-ம் ஆண்டு மார்ச் மாதம் 31 ம் தேதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**முன்னிலை: திருமதி.S.M.பாரிஜான் பி.ஏ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**

1.ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச்- 2020-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

2.இந்நகராட்சியில் திட்டப்பணிகள் சம்பந்தமான விளம்பரத்தினை கீழ்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு பட்டியல் வரப்பட்டுள்ளது.

| | பட்டியல் எண். | தொகை |
|---|---|---|
| 1. மலர் பப்ளிக்கேசன் (மாலை மலர்) | ERD -D 20030161 நாள்: 18.03.2020 | 7980.00 |
| 2. தி டெய்லி தந்தி (தினத்தந்தி) | ERD -1920-0019143 நாள்: 25.03.2020 | 16065.00 |
| | மொத்தம் ரூ. | 24045.00 |

மேற்கண்ட விபரப்படி உள்ள தொகையினை அந்தந்த நாளிதழ்களுக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண்.1535/2018/இ1)

3. பவானி நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 125 KVA ஜெனரேட்டர் எரிபொருள் ( டீசல் + ஆயில் ) செலவினமாக 2020-2021 ஆம் நிதியாண்டிற்கு உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண்.0427/2020/இ1)

4. பவானி நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி அலுவலகத்தில் உள்ள 15 KVA ஜெனரேட்டர் எரிபொருள் ( டீசல் + ஆயில் ) செலவினமாக 2020-21 ஆம் நிதி ஆண்டிற்கு உத்தேச செலவினம் ரூ.1,00,000/- ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண்.0428/2020/இ1)

5. பவானி நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN36 AY6793 க்கு 2020 -20201 ஆம் நிதியாண்டிற்கு ( டீசல் +ஆயில் ) எரிபொருள் செலவு ரூ.2.00 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண்.0429/2020/இ1)

6. பவானி நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN36 AY 6791-க்கு 2020-21 ம் நிதியாண்டில் எரிபொருள் ( டீசல் + ஆயில் செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் (ந.க.எண்.0430/2020/இ1)

7. பவானி நகராட்சி அலுவலக பொறியியல் பிரிவில் பயன்படுத்தி வரும் Colour Printer Model - ( EPSON - L805 ) க்குInkBottle 6 nos வாங்கி பொருத்தும் பணிக்கு செலவுத் தொகை ரூ.5000/-க்கு நகர் மன்ற தீர்மான எண்.31 நாள்: 25.02.2020 அனுமதி வழங்கியதன் பேரில் 12.03.20 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திருவாளர் ஸ்பைடர் டெக்னாலஜி , சேலம் - ரூ.4980/- 1செட்
2. திருவாளர் ராஜ் கம்ப்யூட்டர்ஸ், சேலம் - ரூ.5000/- 1 செட்
3. திருவாளர் சந்திரா ஹைக்டெக் சேலம் ரூ. 4995/- 1 செட்

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திருவாளர் ஸ்பைடர் டெக்னாலஜி சேலம் அவர்கள் ரூ.4980/-க்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.221/2020/இ1)

8. பவானி நகராட்சி பொறியியல் பிரிவில் திட்டப்பணிகளின் ஒப்பந்தப்புள்ளிகளை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய ஆணையாளர், பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் அவர்களுக்கு Digital Signature Certificate ( DSC Card) வாங்கும் பணிக்கு செலவுத் தொகை ரூ.7500க்கு நகர்மன்றம் தீர்மான எண்.40, 25.2.2020 அனுமதி வழங்கியதன் பேரில் 12.03.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. M/s. Gold Soft Computers Komarapaayam - ரூ.2500/ each card
2. M/s. Interfores Salem - Rs.2850/- each card
3. M/s Perennial Systems, Salem Rs. 2750/- each card

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் M/s. Gold Soft Computers, Komarapalayam அவர்கள் அளித்துள்ள ( ரூ.2500/- ench card ) விலைப்புள்ளி குறைவாக உள்ளதனால் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.252/2020/இ1)

9. பவானி நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கணிணி பிரிண்டரில் உள்ள Toner அவ்வப்பொழுது தேவைப்படும் சமயங்களில் Refilling செய்யவும் மற்றும் சிறு பழுதுகள் பார்க்கும் பணிக்கு செலவுத் தொகை ரூ.5000/-க்கு நகர் மன்ற தீர்மான எண். 32,நாள்: 25.02.2020 அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 12.03.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விபரம் | திருவாளர் Hareesh IT Solution Erode | திருவாளர் VL Computers Erode | திருவாளர் Azure Technologies Erode |
|---|---|---|---|---|
| 1 | Toner Refilling | ரூ.460/-e | ரூ.470/-e | ரூ.500/-e |
| 2 | HP Wiper blade | ரூ.180/-e | ரூ.190/-e | ரூ.225/-e |
| 3 | PCR Roller | ரூ.300/-e | ரூ.310/-e | ரூ.450/-e |
| 4 | Doctor blade | ரூ.185/-e | ரூ.200/-e | ரூ.280/-e |
| 5 | Developer Roller (Magnetic | ரூ.410/-e | ரூ.505/-e | ரூ.510/-e |
| 6 | OPC Drum | ரூ.550/-e | ரூ.600/-e | ரூ.650/-e |
| 7 | Toner Cartridge (Printer model no.LBP6680 | ரூ.1900/-e | ரூ.2000/-e | ரூ.2100/-e |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர் Hareesh IT Solution Erode அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்

(ந.க.எண்.222/2020/இ1)

10. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திற்கு 12மெட்ரிக் டன் படிகாரம் சப்ளை செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.27 நாள்: 25.02.2020 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.பாலசுப்ரமணியன், பவானி | 0.21% | மதிப்பீட்டு விகிதத்தை விடகுறைவு |
| 2 | திரு. பி.ஏ.செல்லப்பன், பவானி | 2.50% | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.21% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ். பாலசுப்பிரமணியன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.217/2020/இ1)

11. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திற்கு GAS Chlorine Cylinder சப்ளை செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.28, நாள்:25.02.2020அனுமதி அளித்துள்ளதன் பேரில 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1. | M/s. Siraalik Rathinam Chemicals, Erode | 0.16% | மதிப்பீட்டு விகிதத்தை விடகுறைவு |
| 2 | M/s. Jupiter Enterprises Erode | 1.64% | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.16% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Siraalik Rathinam Chemicals ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.218/2020/இ1 )

12. பவானி நகராட்சி அனைத்து வார்டுகளிலும் உள்ள சிறு மின் விசைபம்புகள் விசை பம்புகள் மற்றும் கழிப்பிடங்களில் உள்ள ஏர்கம்ப்ரசர்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை 2020-21 -ம் நிதியாண்டு ஆண்டு பராமரிப்பு செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.29,நாள்: 25.02.2020அனுமதி அளித்துள்ளதன் பேரில 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.முருகேசன், கவுந்தப்பாடி | 0.21% | மதிப்பீட்டு விகிதத்தை விடகுறைவு |
| 2 | திரு.சி.சின்னசாமி | 1.75% | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.21% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முருகேசன், கவுந்தப்பாடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.219/2020/இ1 )

13.பவானி நகராட்சி பள்ளிகளில் பராமரிப்பு பணிகள் செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.38,நாள்: 25.02.2020அனுமதி அளித்துள்ளதன் பேரில 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1. | திரு.எஸ்.பாலசுப்ரமணியன், பவானி. | 0.48% | மதிப்பீட்டு விகிதத்தை விடகுறைவு |
| 2 | திரு.பி.ஏ.செல்லப்பன், பவானி. | 1.12% | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.48% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.பாலசுப்ரமணியன், பவானி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.252/2020/இ1 )

14.பவானி நகராட்சி வார்டு எண்.3 அண்ணா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.33, நாள்:25.02.2020அனுமதி அளித்துள்ளதன் பேரில் 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1. | திரு.பி.லோகநாதன் ஒப்பந்ததாரர் பவானி. | 0.22% | மதிப்பீட்டு விகிதத்தை விடகுறைவு |
| 2 | திரு.எஸ்.பாலசுப்ரமணியன் ஒப்பந்ததாரர், பவானி | 1.42% | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.22% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.லோகநாதன் ஒப்பந்ததாரர், பவானி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.169/2020/இ1 )

15. பவானி நகராட்சி பழைய பேருந்து நிலையம் மற்றும் எரிவாயு தகனமேடை பகுதிகளில் உள்ள உயர்மின் கோபுர விளக்குகள் பழுத பார்த்தல் பணிக்கு மதிப்பீடு 0.70 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 36, நாள்: 25.02.2020 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1. | M/s.SPN Traders Namakkal | 0.42% | மதிப்பீட்டு விகிதத்தை விடகுறைவு |
| 2 | M/s.Shanjiv Infra Project Namakkal | 1.84% | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.42% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.SPN Traders Namakkal, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.216/2020/இ1 )

16. பவானி நகராட்சி அலுவலக கட்டிடத்தில் பராமரிப்பு செய்தல் பணிக்கு மதிப்பீடு 3.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 35, நாள்: 25.02.2020 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 24.03.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1. | திரு.பி.ஏ.செல்லப்பன் ஒப்பந்ததாரர் | 0.19% | மதிப்பீட்டு விகிதத்தை விடகுறைவு |
| 2 | திரு.எஸ்.பாலசுப்ரமணியன் ஒப்பந்ததாரர் | 1.35% | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தைவிட 0.19% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.ஏ.செல்லப்பன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.234/2020/இ1 )

17. இந்நகராட்சியின் அலுவலகத்திற்கு தினசரி செய்தித்தாள்கள் (தினத்தந்தி) தினகரன் மற்றும் காலைக்கதிர் ) ஆகிய செய்தித்தாள்கள் 2019-2020-ம் ஆண்டிற்கு வாங்கியதற்கும் 2020-2021 ம் ஆண்டிற்கு தினசரி செய்தித்தாள்கள் வாங்கப்படுவதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் தொகை ரூ.15,000/- ( பதினைந்தாயிரம் மட்டும் ) பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.477/2020/டி2)

18. இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுக்கவும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கும் கிருமிநாசினி தெளித்து கிருமி நாசினம் செய்யும் பணிகளுக்கும் தேவைப்பட்ட விழிப்புணர்வு பிரதிகள் Posters மற்றும் ஸ்டிக்கர்கள் போன்றவைகளும் நீர்த்த சுண்ணாம்பு துாள், கருப்பு பினாயில் லைசால், பாதுகாப்பு உபகரணங்கள், ஸ்பிரேயர்கள், மாப்பு மற்றும் வாளிகள் போன்றவைகள் நோய் தடுப்பு பணி அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் Tamilnadu Muliti purpose Indco Serve, திருச்சிராப்பள்ளி-8 என்னும் கூட்டுறவு நிறுவனத்தினரிடம் கொள்முதல் செய்து பயன்படுத்தப்பட்டு நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கொள்முதல் செய்யப்பட்ட பொருள்களின் விபரம்:**

| வ.எண் | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கொரோனா வைரஸ் காய்ச்சல் பாதுகாப்பு வழிமுறைகள் விழிப்புணர்வு விளம்பர நோட்டீஸ் - ஒரு கலர் | 12000 எண்ணிக்கை |
| 2 | கொரோனா வைரஸ் பற்றி பரவி வரும் வதந்திகளுக்கு விளக்கங்கள் குறித்த விழிப்புணர்வு நோட்டீஸ் - ஒரு கலர் (கேள்வி மற்றும் பதில் வடிவில்) | 3000 எண்ணிக்கை |
| 3 | கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பொதுமக்கள் வீடு மற்றும் பொது இடங்களில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் - டோர் ஸ்டிக்கர் - ஒரு கலர்<br>Sticker size 180 mm x 2455 mm | 2000 எண்ணிக்கை |
| 4 | கொரோனா வைரஸ் காய்ச்சல் பற்றிய விளம்பர விழிப்புணர்வு- சுவரொட்டிகள் - மல்டி கலரில் | 500 எண்ணிக்கை |
| 5 | லைசால் - Lizol Cented (Surface Cleaner) | 200 லிட்டர் |
| 6 | முகவுறை சுகாதார துறையினால் அங்கீகரிக்கப்பட்ட மாடலில் காட்ன் துணியால் தைக்கப்பட்டது - சுத்தம் செய்து பலமுறை பயன்படுத்தக்கூடியது. | 150 எண்ணிக்கை |
| 7 | கையுறை - காட்டன் மிக்ஸ்டு - Hand Gloves | 125 எண்ணிக்கை |
| 8 | கையுறை - சிந்தெட்டிக் - Hand Gloves | 10 எண்ணிக்கை |
| 9 | முழு உறை - Aproan Syncenthik Rain Coat Model | 25 எண்ணிக்கை |
| 10 | பிளாஸ்டிக் ஸ்பிரேயர் - மருந்து தெளிக்க ஏதுவாக உள்ள தெளிப்பான் | 9 எண்ணிக்கை |
| 11 | பிளாஸ்டிக் வாளி - 10 லிட்டர் | 10 எண்ணிக்கை |
| 12 | மாப்பு (முதல் தரமானது) | 10 எண்ணிக்கை |
| 13 | நீர்த்த சுண்ணாம்பு பவுடர் - Hydrated Lime Powder | 3000 கிலோ |
| 14 | பிளீச்சிங் பவுடர் - (Grade-II) | 300 கிலோ |
| 15 | கருப்பு பினாயில் - Black Phenyl | 100 லிட்டர் |

மேற்படி பொருட்களை நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி Tamilnadu Muliti purpose Indco Serve, திருச்சிராப்பள்ளி-8 நிறுவனத்தினரின் விலைவிகிதத்தில் கொள்முதல் செய்து பணி மேற்கொள்ளப்பட்டதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (ந.க.எண்.360/2020/ H1)

19. பவானி நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் கீழ்கண்ட விபரப்படி புதிய தெருவிளக்குகள் அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்:1<br>சொக்கராயன்காடு | புதிய மின்கம்பம் அமைத்து புதிய தெருவிளக்கு அமைக்க | 1 எண்ணிக்கை |
| 2 | வார்டு எண்:1<br>சொக்கராயன் காடு | ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் புதிய தெருவிளக்கு அமைத்தல் | 7 எண்ணிக்கை |
| 3 | வார்டு எண்:10<br>பழனிபுரம் முதல் வீதி, (அம்மன் நகர்) | ஏற்கனவே உள்ள மின்கம்பங்களில் புதிய தெருவிளக்குகள் பாருத்துதல் | 5 எண்ணிக்கை |
| 4 | வார்டு எண்.11,<br>தேவபுரம்<br>(MLA அலுவலகம் வீதி) | புதிய மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்தல் | 1 எண்ணிக்கை |

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.0083/2020/இ1)

20. பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு 53 வேலை நாட்களுக்கு வீடுவீடாக சென்று கொசுப்புழு மருந்து தெளிப்பு பணி, கொசு உற்பத்தியாகும் இடங்களை அழித்தல் மற்றும் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த புகை மருந்து தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டி இருப்பதால் அதற்கான கொசுப்புழு தடுப்பு பணியாளர்கள் (Domestic Breeding Checkers) கொண்டு தடுப்பு பணிகளை மேற்கொள்ள ஆகும் செலவினத்திற்கு ஏற்கனவே நகர்மன்றம் ஒப்புதல் கோரியுள்ளதன் பேரில் 27.02.2020-ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **நிறுவனத்தின் பெயர்** | **ஒப்பந்த புள்ளி விலை விகிதம் (நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான விலைவிகிதம்)** |
|---|---|---|
| 1 | Trustus Outsourcing Solutions Pvt Ltd,<br>117, 28’th Street,<br>Balaji nagar, Chennai - 600 091. | ரூ.533 /– |
| 2 | S. Balasubramaniyan<br>43, Palanipuram 3rd Street,<br>Bhavani. | ரூ.536 /– |

<u>அலுவலக குறிப்பு</u>:–

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் குறிப்பிடப்பட்டுள்ள Trustus Outsourcing Solutions Pvt Ltd, No: 117, 28’th Street, Balaji nagar, Chennai - 600 091 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் குறைவாக உள்ளதை மன்றம் ஏற்கலாம்.
2. நோய்தடுப்புப் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய Trustus Outsourcing Solutions Pvt Ltd, Chennai அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.217/2020/எச்1)

**21.**பவானி நகராட்சி பொதுசுகாதார பிரிவின் பராமரிப்பில் உள்ள 3 லாரிகள் மற்றும் 4 ஆட்டோ (LCV), 1 நச்சுத்தொட்டி சுத்தம் செய்யும் வாகனம் ஆகமொத்தம் – 8 வாகனங்களுக்கு 2020-2021ஆம் ஆண்டில் அவ்வபோது ஏற்படும் பழுதுகளை சரிசெய்து கொள்ளவும் தகுதிச்சான்று முடிவுறும் பட்சத்தில் தகுதிசான்று புதுப்பிக்கும் பணிக்கான பழுதுகள் செப்பனிடுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும், மேற்குறிப்பிட்ட வாகனங்களுக்கு அரசு விதிகளின் படி சாலைவரி, பசுமைவரி, தகுதிச்சான்று புதுப்பித்தல் கட்டணம், சேவைக்கட்டணங்கள், புகை பரிசோதனை கட்டணம் மற்றும் காப்பீட்டு தொகை (Insurance) ஆகிய செலவினங்களை அவ்வப்போது நடைமுறையில் உள்ள முறைகள் மூலம் செலுத்தி பணி மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான செலவின விபரம் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | வாகனபழுதுகள் செப்பனிடுதல், பேட்டரி வாங்குதல்<br>பசுமைவரி, தகுதிச்சான்றிதழ் புதுப்பித்தல்,<br>புகை பரிசோதனை கட்டணம்,<br>சேவைக்கட்டணம். | – | ரூ. 5, 25,000 |
| 2. | சாலைவரி செலுத்துதல் (Online முறையில்) | – | ரூ. 1,25,000 |
| 3. | வாகனங்களுக்கான காப்பீட்டு தொகை (Insurance) | – | ரூ.3, 50,000 |
| | **மொத்தம்** | **–** | **ரூ.10,00,000** |

மேலும், நான்கு மினி ஆட்டோக்களை டாடா நிறுவனத்தினரின் அங்கிகரிக்கப்பட்ட பணிமனையான M/s Excel Auto services, Erode அவர்கள் பணிமனையில் நிறுவனம் குறிப்பிடும் விலைவிகிதத்தில் பழுதுகளை செப்பணிட்டுக்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

மேற்கண்டுள்ளவாறு 2020-2021 ஆண்டில் செலவினங்கள் மேற்கொள்வதற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1) வாகன பழுதுகள் செப்பனிடுதல், பேட்டரி கொள்முதல் செய்தல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள வேண்டி இருப்பின் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கும் நிறுவனத்தினரிடம் பணி மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) நான்கு மினி ஆட்டோக்களை டாடா நிறுவனத்தினரின் அங்கிகரிக்கப்பட்ட பணிமனையான M/s Excel Auto services, Erode அவர்கள் பணிமனையில் நிறுவனம் குறிப்பிடும் விலைவிகிதத்தில் பழுதுகளை செப்பணிட்டுக்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.274/2020/எச்1 )

22. பவானி நகராட்சியில் பொது சுகாதாரபிரிவில் துப்புரவுப்பணி மேற்கொள்ளும் துப்புரவு பணியாளர்களுக்கு 2020–2021 ஆம் ஆண்டிற்கு தேவையான தளவாடச்சாமான்களை அவ்வப்போது தேவைக்கேற்ப வாங்கி வழங்கவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,75,000/–ற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1) ஒப்பந்தப்புள்ளி பெற்று தளவாடச்சாமான்களை வாங்கிக்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.275/2020/எச்1 )

23. பவானி நகராட்சி பகுதிகளில் அவ்வப்பொது பெரிய மண் சாக்கடை தூர் வாருதல், முள்செடிகளை அப்புறப்படுத்துல், உரக்கிடங்கில் குப்பைகளை சமன் செய்தல், உரமாக்கப்பட்ட மக்கும் கழிவுகளை லாரிகளை ஏற்றி அனுப்பும் பணி, ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி ஆகியவைகளை JCB இயந்திரத்தை கொண்டு பணிமேற்கொள்ள வேண்டியுள்ளதால் 2020–2021–ம் ஆண்டில் அவ்வப்போது தேவைக்கேற்ப JCB வாகனத்தை பயன்படுத்தி பணி மேற்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.3,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1) ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2) செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 276/2020/எச்1 )

24. பவானி நகராட்சியில் பொது சுகாதாரபிரிவின் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு அரசு மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் துணை இயக்குநர், பொதுசுகாதாரப்பணிகள் அவர்களின் மூலமாக அறிமுகப்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் செயல்முறைகள் ஆகியவைகளை பொது மக்களுக்கு கொண்டு செல்லவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நகரில் அவ்வப்போது இதுசம்பந்தமான துண்டு பிரசுரங்கள் அச்சடித்து 2020–2021–ம் ஆண்டில் தேவைக்கு ஏற்ப பொதுமக்களுக்கு விநியோகம் செய்யவும் அதற்காகாகும் தோராய செலவினம் ரூ.1,00,000/-ற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. ஒப்பந்தப்புள்ளி பெற்று துண்டி பிரசுரங்கள் தயார் செய்ய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 277/2020/எச்1 )

25. பவானி நகராட்சியில் பொது சுகாதாரபிரிவின் செயல்படுத்தப்படும் பணிகளுக்கு அரசு மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் துணை இயக்குநர், பொதுசுகாதாரப்பணிகள் அவர்களின் மூலமாக அறிமுகப்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் செயல்முறைகள் ஆகியவைகளை பொது மக்களுக்கு கொண்டு செல்லவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நகரில் அவ்வப்போது இதுசம்பந்தமான ஃபிளக்ஸ் போர்டுகள் (Flex Board) 2020–2021–ம் ஆண்டில் தேவைக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.1, 50,000/-ற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. ஒப்பந்தப்புள்ளி பெற்று ஃபிளக்ஸ் போர்டு தயார் செய்ய மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 278 /2020/எச்1)

**26.** பவானி நகராட்சியில் பொது சுகாதாரபிரிவில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கு பணி பாதுகாப்புக்காக வழங்க வேண்டிய பணி பாதுகாப்பு உபரணங்களை (Safety Equipments) அவ்வப்போது தேவைக்கேற்ப **2020–2021–ம்** ஆண்டில் வாங்கி கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 279 /2020/எச்1)

27.பவானி நகராட்சியில் பணிபுரிந்து வரும் சீருடை பெற தகுதியான பணியாளர்கள் அனைவருக்கும் **2020–2021–ம்** ஆண்டிற்கு சீருடைகள் மற்றும் தையற் கூலி அரசாணை (நிலை)எண்:168 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை(பேரூ1) நாள்: 16.11.2015-ன் படி வழங்க வேணடியுள்ளது. சீருடைகளை அரசு நிறுவனமான ஈரோடு வசந்தம் கோ ஆப்டெக்ஸ் நிறுவனத்தாரிடமிருந்து அந்நிறுவனத்தினரின் விலை விகிதத்தில் வாங்கிக்கொள்ளவும், அதற்குண்டான தையல்கூலி அரசாணையின் படி வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 280 /2020/எச்1)

28.பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொசுக்களை கட்டுப்படுத்த 2020-2021ஆம் நிதி ஆண்டில் கொசுக்காளால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த, கொசுப்புழுக்கள் மற்றும் முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு தெளிக்கப்பட பயன்படுத்தப்படும் Temephos Emulsifiable 50% EC, Bacillus Thuringiensis Var Israelensis Aqueous Suspension Serotype H14 அல்லது Bacillus Thuringiensis 5% WP மற்றும் Pyrethrum 2% Extract மற்றும் ஆகிய மருந்துகளை மேற்படி நிதியாண்டில் தேவைக்கேற்ப அவ்வப்போது தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் லிமிடெட் நிறுவனத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினரிடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தில் 2020-2021-ஆம் நிதி ஆண்டில் அவ்வப்போது தேவைக்கேற்ப வாங்கிப் பயன்படுத்தி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. பொது சுகாதாரப்பிரிவின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்

(ந.க.எண். 281/2020/எச்1)

29. பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் மூலம் நகரின் சுகாதாரத்தை நல்ல முறையில் பராமரிக்க கிருமிநாசினம் செய்யப்படும் பணிக்கு 2020-2021ஆம் நிதி ஆண்டில் தேவைப்படும் நீர்த்த சுண்ணாம்புத்தூள், பினாயில் மற்றும் பிளிச்சிங் பவுடர் கிரேடு-II ஆகிய கிருமி நாசினிகளை மேற்படி நிதி ஆண்டில் தேவைக்கேற்ப வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி (Annual Tender) வாயிலாக அவ்வப்போது வாங்கிக் கொள்ளவும் அதற்கு ஆகும் தோராய செலவினம் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | பிளிச்சிங் பவுடர் கிரோடு-II | - | 1, 10,000 |
| 2. | கருப்பு பினாயில், வெள்ளை பினாயில் | - | 90,000 |
| 3. | கிளினிங் ஆசிட் | - | 50,000 |
| 4. | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | - | 2, 50,000 |

மேற்கண்டுள்ள விபரப்படி செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 282 /2020/எச்1)

30. பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் மூலம் நகரின் சுகாதாரத்தை நல்ல முறையில் பராமரிக்க ஈக்களை கட்டுப்படுத்தும் பணிக்கு 2020 - 2021-ஆம் நிதி ஆண்டில் தேவைக்கு ஏற்ப ஈக்களை கட்டுப்படுத்தும் மருந்தான Dichlorvos 76% E.C மருந்தினை மேற்படி நிதி ஆண்டில் தேவைக்கேற்ப வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி (Annual Tender) வாயிலாக அவ்வப்போது வாங்கிக் கொள்ளவும் அதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.65,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 283 /2020/எச்1)

31. பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள வாகனங்கள், கொசுப்புகை மருந்து தெளிக்கும் புகைத்தெளிப்பான்கள், பூச்சிகளை கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்டு வரும் பவர் ஸ்பிரேயர்கள் போன்றவற்றிற்கு 2020-2021-ம் நிதியாண்டில் தேவைக்கேற்ப பெட்ரோல், டீசல், ஆயில் மற்றும் கிரீஸ் போன்றவைகள் வாங்கி பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்டுள்ளவைகளை இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேசன் நிறுவனத்தாரின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான M/s ஸ்ரீ வெங்கடேஸ்வரா ப்யூல்ஸ் (ADHOC) பவானி அவர்களிடமிருந்து வாங்கி பயன்படுத்தவும் அதற்கான ஆண்டு உத்தேச செலவினம் ரூ.21.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 284/2020/எச்1)

32. இந்நகராட்சியில் நாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுப்படுத்தும் திட்டமான ABC Program-ன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி சுற்றித்திரியும் நாய்களைப்பிடித்து கருத்தடை அறுவைசிகிச்சை செய்யும் பணிக்கு 2020-2021-ஆம் ஆண்டில் தேவையின் அடிப்படையில் பணிமேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு ரூ.2,50,000/-த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 285 /2020/எச்1)

33. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு பகுதிகள் மற்றும் தெருக்களில் அனுமதியின்றி சுற்றித்திரியும் பன்றிகளால் பொது சுகாதார கேடு ஏற்படா வண்ணம் 2020-2021ஆம் ஆண்டில் தேவையின் அடிப்படையில் பன்றிகளை உயிருடன் பிடித்து நகராட்சி எல்லைக்கு வெளியே அப்புறப்படுத்தும் பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.1,50,000/-த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 286 /2020/எச்1)

34. பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் கொசுக்களை கட்டுப்படுத்தி டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க தேவையான எண்ணிக்கையில் DBC பணியாளர்களை 2020-21ஆம் ஆண்டில் Outsourcing முறையில் ஒப்பந்த அடிப்படையில் தகுதியான ஒப்பந்ததாரர் மூலம் பணியாளர்களை பெற்று கொசுக்களால் பரவும் தொற்று நோய்களை கட்டுப்படுத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ. 56.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

Domestic Breading Checkers (DBC) பணியாளர்களை Outsourcing முறையில் தேவையான காலத்திற்கு தேவையான எண்ணிக்கையில் ஒப்பந்ததாரரிடம் பெற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

1. பொது சுகாதாரப்பிரிவின் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 287/2020/எச்1)

35. இந்நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினமும் உருவாகும் கழிவுகளை வீடுவீடாக சென்று தரம்பிரித்து சேகரிக்கப்படும் மக்காத கழிவுகளில் மறுசுழற்சிக்குப் பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகள், இரப்பர் தோல்பொருட்கள், உடைந்த மரக்கட்டைகள், உடைந்த மரச்சாமான்கள், பழைய மிதியடிகள், மற்றும் இதர எரியும் தன்மையுடைய கழிவுகளை முறைப்படி அப்புறப்படுத்திட இன்ஸ்னிரேட்டர் வசதி இந்நகராட்சியில் இல்லாததால் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் மேற்படி கழிவுகளை M/s Ultratech Cements, Ariyalur, M/s Dalmia Cements, Dalmiapuram, M/s ACC Cements, மதுக்கரை, கோயம்புத்தூர், M/s இந்தியா சிமெண்ட்ஸ், சங்ககிரி போன்ற சிமெண்ட் ஆலைகளுக்கும், மற்றும் M/s Mak India Ltd., Erode அவர்களுக்கும் அவ்வப்போது ஆலையின் அனுமதியினை பெற்று அவ்வப்போது தேவைக்கேற்ப கொண்டு சென்று அப்புறப்படுத்த தேவையான JCB வாகனம் மற்றும் சரக்கு ஏற்றி செல்லும் லாரிகளை வாடகைக்கு அமர்த்தும் முறையில் ஈடுபடுத்தி கழிவுகளை 2020-21 ஆம் ஆண்டில் கொண்டுசென்று இறுதியாக்கம் (Final Disposal Of Compustable Wastes) செய்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இப்பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 288 /2020/எச்1)

36. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தினமும் இந்நகரில் சேகரிக்கப்படும் கழிவுகளில் மக்கும் கழிவுகள் நுண் உரம் கூடத்தில் உரமாக்கப்பட்டு வருகிறது. மக்காத உலர் கழிவுகள் தனியே சேகரித்து திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ல் தெரிவித்துள்ளபடி மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு அனுப்பி இறுதியாக்கம் (Final Disposal) செய்து அப்புறப்படுத்த தினமும் 27 வார்டுகளுக்கும் 50 கிலோ கொள்ளளவு கொண்ட கித்தான் சாக்குப்பைகள் தினமும் 60 முதல் 75 எண்ணிக்கை தேவைப்படுகிறது.

எனவே, 01.04.2020ஆம் தேதி முதல் 31.03.2021ஆம் தேதி வரை மேற்படி கித்தான் சாக்குப் பைகளை கொள்முதல் செய்து உபயோகப்படுத்தி உலர்கழிவுகளை சேகரித்து அனுப்பி வைக்கவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. இதற்கான செலவினம் ரூ.3,00,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 289 /2020/எச்1)

37.இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் அனைத்து வார்டு பகுதிகளிலும் தரம் பிரித்து வாங்கப்படும் மக்கும் கழிவுகளை இந்நகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள இரண்டு நுண் உரக்குடில்களில் (MCC) இயந்திரம் மூலம் தூளாக்கப்பட்டு அரைத்து தூளாக்கப்பட்ட கழிவுகளை அதற்கான தொட்டிகளில் நிரப்பி உரமாக்கப்படுகிறது. மேற்படி மக்கும் கழிவுகளை தொட்டிகளில் விரைவாக மக்கும் தன்மையை ஏற்படுத்தி உரமாக்க நுண்ணுயிர் திரவம் MAPLE EMI கொள்முதல் செய்து தெளிக்க வேண்டியுள்ளது.

இப்பணிக்குத் தேவையான MAPLE EMI திரவத்தை கொள்முதல் செய்து பயன்படுத்திட வேண்டுமெனவும், அவற்றை தமிழ்நாடு அரசு கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்ட்கோ சர்வ், திருச்சி நிறுவனத்திடம் கொள்முதல் செய்து கொள்ளவும் முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் கடிதத்தின் வாயிலாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்ட நிறுவனத்திடமிருந்து Maple EMI திரவத்தினை லிட்டர் 1க்கு ரூ.972/- (GST உட்பட) என்னும் விலை விகிதத்தில் 2020-21-ஆம் ஆண்டில் அவ்வப்போது தேவைக்கேற்ப நேரடியாக அந்நிறுவனத்தில் கொள்முதல் செய்து பயன்படுத்திக் கொள்ள மன்ற அனுமதியும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 290 /2020/எச்1)

38. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கென தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வீடு வீடாக குப்பைகளை தரம் பிரித்து சேகரிக்க பேட்டரியினால் இயங்கும் வாகனங்கள் (BOVs) 20 எண்ணிக்கை கடந்த 28.12.2018 ஆம் தேதியன்று புதியதாக வாங்கப்பட்டு நகரில் கழிவுகள் சேகரிக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வாகனங்கள் வாங்கப்பட்டு ஓராண்டுகாலம் முடிவடைந்துவிட்டதால் அவ்வாகனங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே, 10 எண்ணிக்கை பேட்டரி வாகனங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ. 3,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 291 /2020/எச்1)

39.பவானி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அவ்வப்போது காவல்துறையினரின் கடிதத்தின் பேரில் அனாதைப் பிணங்களை இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டு பாதுகாப்பான முறையில் நகராட்சி மயானத்தில் மண்ணடக்கம் செய்யப்படுகிறது. மேற்படி, அனாதை பிணங்களை நல்லடக்கம் செய்யும் துப்புரவு பணியாளர்களுக்கு அரசு நிர்ணயிக்கும் தொகையினை 01.04.2020 முதல் 31.03.2021 வரையிலான காலங்களுக்கு வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,000/-த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 292 /2020/எச்1)

40. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , திருப்பூர் அவர்களால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஆள் வெளிக்கொணர்வு முகமை மூலம் இந்நகராட்சிக்கு ஏழு பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் ஒருவர் என்ற அடிப்படையில் SKY Manpower Agencies திண்டுக்கல் நிறுவனத்தினர் மூலம் 31.03.2020 ஆம் தேதி வரை பணியாளர்கள் பெற்று பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 26458/2016/பி1, நாள் 11.09.2019-ம் தேதியிட்ட உத்திரவின் படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 31.03.2020 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடித ந.க.எண். பி1/26458/2016 நாள்: 30.03.2020 ம் தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மேற்படி ஒப்பந்த பணிகாலத்தினை 01.04.2020-ம் தேதியிலிருந்து 30.06.2020 ஆம் தேதி முடிய கால நீட்டிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, அப்பணியாளர்களை இந்நகராட்சியில் தொடர்ந்து 01.04.2020 ஆம் தேதி முதல் 30.06.2020 ஆம் தேதி வரை தொடர்ந்து SKY Man Power Agencies, திண்டுக்கல் நிறுவனத்தினரிடமிருந்து பணியாளர்களைப் பெற்று IEC பணிகளை மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினத்தினை SBM திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அரசிடமிருந்து பெறப்படும் தொகையிலிருந்து பின்னர் சரி செய்து கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.631/2018/H1)

41. நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனங்கள் TN36AY6791 மற்றும் TN36AY6793 க்கு 2020-21-ம் ஆண்டிற்கு இன்சூரன்ஸ், சர்வீஸ் போன்ற பராமரிப்பு செலவுகளுக்கு ரூ.2.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனங்களுக்கு பராமரிப்பு செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.954/2017/இ1)

42. பவானி நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகம் புதிய பேருந்து நிலையத்தில் இயங்கி வருகின்றது. இதில் சட்டினி அரைக்கும் இயந்திரம், சீலிங் பேன், டியூப்லைட் பிட்டிங்ஸ், இன்வெர்டர் ( VPS) ஆகியவைகள் பழுதுபட்டுள்ளது மற்றும் இருப்பு அறையில் பொருட்கள் வைக்க Self கட்டி தர வேண்டியுள்ளது. தண்ணீர் சேமித்து வைக்க DUM வாங்கி கொடுக்க வேண்டியுள்ளது. மற்றும் அவ்வப்பொழுது எற்படும் பழுதுகளை சரிசெய்து கொடுத்து அம்மா உணவகம் சீராக இயங்க வைக்க வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.75,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0413/2020/இ1)

43. பவானி நகராட்சிக்குட்பட்ட மேட்டூர் மெயின்ரோடு, அந்தியூர் பிரிவு, நகராட்சி வணிக வளாகம் பின்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான காலி இடத்தில் சைக்கிள் ஸ்டேண்ட் கட்டப்பட்டுள்ளது. இதில் வடக்கு புறம் பென்சிங் அமைத்து கேட் அமைத்தல், செட்டின் வடக்கு சுவர் கட்டி weld mesh மற்றும் G.I sheet கொண்டு side அடைத்தல், எலக்ட்ரிக்கல் பணிகள் செய்து வேலையை முழுமையாக செய்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0417/2020/இ1)

44. இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு உலர்கழிவுகளை தனியே பிரித்து சேகரித்து மக்காத கழிவுகளில் மறுசுழற்சி / விற்பனைக்கு உதவாத வகைகள்/ எரித்து சிமெண்ட் ஆலைகளில் அப்புறப்படுத்தும் கழிவுகள் என அனுப்பி வைக்கும் பணிக்கு தேவைப்பட்ட கித்தான் சாக்கு பைகளில் 25 கிலோ கொள்ளளவு கொண்ட கித்தான் சாக்குபைகள் ஒன்றுக்கு ரூ.5/- வீதமும் 40-50 கிலோ கொள்ளளவு கொண்ட கித்தான் சாக்குபைகள் ஒன்றுக்கு ரூ.16/- வீதமும், மெஜர்ஸ்.எஸ். பாலசுப்ரமணியன் ஒப்பந்ததாரர், அவர்களிடமிருந்து பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்று நோய் வேகமாக பரவி வருவதை தடுக்கும் பணியாக 144 ஊரடங்கு உத்திரவு நடைமுறையில் உள்ளதால் அவசர அவசியம் கருதி ஏற்கனவே கித்தான் சாக்கு பைகள் விநியோக செய்யும் ஒப்பந்ததாரரிடம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் எதிர்வரும் 01.04.2020 முதல் 31.05.2020 வரை பெற்று தொடர்ந்து பணிமேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.45000/- ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
2. அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிமேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.201/2019/எச்1)

45. பொது சுகாதாரப்பிரிவு TN36AP3151 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு கொள்ள ஆகும் செலவினத்திற்கு ஏற்கனவே நகர்மன்றம் தீர்மான எண்.60, நாள்: 19.02.2020 -ல் ஒப்புதல் வழங்கியுள்ளதன் அடிப்படையில் 09.03.2020 -ம் தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொருள் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ் 63, வைரபாளையம் நால்ரோடு , வாட்டர் ஆபிஸ் ரோடு, கருங்கல்பாளையம், ஈரோடு. | ரூ.45,500/- |
| 2 | ஸ்ரீ முருகன் ஆட்டோஸ், 26, செங்கோட்டையா நகர் , வைரபாளையம், ஈரோடு. | ரூ.46,150/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் குறிப்பிட்டுள்ள ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம். அவசர அவசியம் கருதி தனி அலுவலர் பவானி நகராட்சி அவர்களிடம் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 293/2020/எச்1)

46.பவானி நகராட்சி வார்டு எண்.24,151, மக்கான் தெருவில் பவானி நகராட்சிக்கு சொந்தமான ஆடுவதை செய்யும் கூடம் ( Slaughter house) இயங்கி வருகிறது. மேற்படி ஆடுவதை செய்யும் கூடத்திற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்,பெருந்துறை அவர்களின் Water (Prevention and control of Pollution ) Act 1974 மற்றும் Air (Prevention and control of Pollution) Act 1981 -ன் கீழ் ஆடுவதை செய்யும் கூடத்தினை இயக்குவதற்கான இசைவானை ( consent to operate ) 31.03.2020 தேதியுடன் முடிவடைகிறது. விதிமுறைகளின் படி ஆடுவதை செய்யும் கூடத்தினை தொடர்ந்து இயக்குவதற்கு உரிமத்தினை 01.04.2020 முதல் ஓராண்டிற்கு புதுப்பித்து இசைவானை ( Consent to operate) பெறுவதற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், பெருந்துறை அவர்களுக்கு புதுப்பித்தல் கட்டணம் ரூ.8,800/- க்கான வங்கி வரைவோலையாக செலுத்தி உரிமத்தினை புதுப்பித்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.437/2016/எச்1)

47. இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவின் மூலம் அவ்வப்போது எழுதுபொருட்கள் வாங்குதல், கணிணி சம்பந்தமான சில்லறை செலவினங்கள் மேற்கொள்ளுதல், வாகனங்களின் டயர்பஞ்சர் போடுதல் , சிறிய பழுதுகள் சரிசெய்தல், தபால் செலவினங்கள் மற்றும் இதர செலவினங்களை 2020 -2021 ஆம் நிதியாண்டில் ஒவ்வொரு சில்லறை செலவினமும் ரூ.100/- பட்டியல் தொகைக்கு மிகாமல் தேவைக்கேற்ப அவ்வப்போது மேற்கொள்ளவும், செலவிடப்பட்ட சில்லறை செலவினப்பட்டியல் தொகையினை துப்புரவு அலுவலரின் நிரந்தர முன் பணத் தொகை ரூ.1000/-ல் இருந்து பெற்றுக்கொள்ளவும் இந்திதியாண்டில் ரூ.60000/- ஐ செலவிடவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.293/2020/எச்1)